

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.9.2025) சென்னையில் நடைபெற்ற நினைவில் வாழும் கழக தலைமை நிலையச் செயலாளர் ஆ.த.சதாசிவம் அவர்களின் மகனும், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளருமான அழகிரி சதாசிவம் பெனோ செஃபின் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரையாற்றுகிறார்!

# கரூர் கழக முப்பெரும் விழாவில் அலைகடலென திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அழைப்பு!

கரூர், செப். 17 –

கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரை யாற்றுகின்றார்கள். அலைகடலென அனைவரும் திரண்டு வருமாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.



கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இன்று (செப்டம்பர் 17) மாலை 5 மணி அளவில் கரூர் மாவட்டம், கரூர் கோடங்கிபட்டி (திருச்சி பைபாஸ் ரோடு) கலைஞர் திடலில் தி.மு.க. முப்பெரும் விழா 2025 நடைபெற உள்ளது. கழகப் பொதுச் செயலாளர் துரை முருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை உரை ஆற்ற உள்ளார்கள். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, திருச்சி என்.சிவா, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் ப.செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இவ்விழாவில் பெரியார் விருது கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கும், அண்ணா விருது தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினர், பாளையங்கோட்டை நகரமன்ற முன்னாள் தலைவர் சுப சீதாராமன் அவர்களுக்கும், கலைஞர் விருது நூற்றாண்டு கண்டவரும், அண்ணா நகர் பகுதி முன்னாள் செயலாளர், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது கழக மூத்த முன்னோடி தலைமைச் செயற்குழு உறுப்பினர் நினைவில் வாழும் குளித்தலை சிவராமன் அவரது குடும்பத்தாருக்கும். பேராசிரியர் விருது கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர். சட்டப்பேரவை முன்னாள் கொறடா மருதூர் ராமலிங்கம் அவர்களுக்கும் மு.க.ஸ்டாலின் விருது ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் முன்னாள் செயலாளர், முன்னாள் அமைச்சர், பொங்கலூர் பழனிச்சாமி அவர்களுக்கும், முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் விருது மூத்த பத்திரிகையாளர் ஏ. எஸ். பன்னீர்செல்வன் அவர்களுக்கும் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை கழக விருதுகளாக தமிழ்நாட்டில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பணமுடிப்பு ஆகியவற்றை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இவ்விழாவில் தலைமை கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். மாநில சார்பு அணி நிர்வாகிகள், கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயற்குழுபொதுக் குழு உறுப்பினர்கள், கழக மாவட்டத் திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் பங்கேற்கின்றனர்.

இதுசமயம், கரூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள். மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BDA, BLC பூத் இளைஞர் அணி, பூத் மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள்உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அலைகடலென திரள்வீர் என அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு வி.செந்தில்பாலாஜி குறிப்பிட்டுள்ளார்.

---

**இதுவரை ரூ.6 கோடியே 31 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!**

**2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்**

**2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!**

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 31 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 15–09–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கே.காந்தி, தளவாய் – அஞ்சல், செந்துறை ஒன்றியம்,<br>அரியலூர் மாவட்டம். | 25,000/–– |
| 2. | பி. சுகுமார், மேங்காட்டு தெரு, சங்கர்நகர்,<br>பசுபதிபாளையம், கரூர் மாவட்டம் | 25,000/– |
| 3. | வி. முத்துரங்கன், நடுத் தெரு, எடப்பாடி,<br>சேலம் மாவட்டம் | 25,000/– |
| 4. | எஸ். பழனிசாமி, 8வது வார்டு, குமாரபாளையம்,<br>நாமக்கல் மாவட்டம். | 25,000/– |
| 5. | சே. சொர்ணம், சிக்களூர் அஞ்சல்,<br>அரூர் தாலுக்கா, தருமபுரி மாவட்டம். | 25,000/– |
| 6. | கோ. ராஜ்மோகன், கிழக்கு வீதி, கள்ளிமடை,<br>சிங்காநல்லூர், கோவை | 25,000/– |
| 7. | பி.கணேசமூர்த்தி, நடுப்பாளையம்,<br>குருமந்தூர் அஞ்சல், ஈரோடு மாவட்டம். | 25,000/– |
| 8. | எஸ்.பாக்கர்அலி, பொன்நகர்,<br>பொல்லிக்காளிபாளையம், பல்லடம், திருப்பூர். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |


